செய்தி வெளியீடு எண்:1202 நாள்:25.11.2021

## 75–வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா – மக்கள் அனைவரும் அடிப்படைக் கடமைகளை பின்பற்றுதல் வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 01.11.2021 அன்று சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் 75–வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவை "Azadi Ka Amrit Mahotsav" முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த தியாகச் சீலர்களைச் சிறப்பிக்கும் வகையில் விடுதலைப் போரில் தமிழகம் என்ற சிறப்புமிக்க கண்காட்சியினைத் தொடங்கி வைத்தார்கள். இளைய தலைமுறையினர் சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாறு, அவர்களது தியாகம், அர்ப்பணிப்பு ஆகியவற்றை அறிந்துகொள்ளவும், தேசப்பற்றினை தமக்குள் வளர்த்துக்கொள்ளவும், நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும் என்ற உணர்வை விதைத்திடும் வகையில் இந்த அரிய புகைப்பட கண்காட்சி அமைந்ததாக பலரும் பாராட்டுத் தெரிவித்தனர்.

இந்திய தேசம் கொண்டாடும் இந்த 75–வது சுதந்திரத் திருநாளில் இந்திய மக்கள் அனைவரும் தங்களது அடிப்படைக் கடமைகளைப் பின்பற்றுவது மிகவும் அவசியமாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு இணங்கி இயங்குதல் மற்றும் அதன் குறிக்கோள்கள், உறுப்பமைவுகள், நாட்டுக்கொடி, நாட்டுப்பண் இவற்றை மதித்து நடத்தல் வேண்டும். நமது நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு உணர்வூட்டிய உயர் குறிக்கோள்களைப் பேணிப் பின்பற்றுதல் வேண்டும். இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை ஓங்கச் செய்து ஓம்பிக்காக்க வேண்டும். வேண்டுங்கால், நாட்டினைக் காத்தல் மற்றும் நாட்டுப்பணி ஆற்றுதல் வேண்டும். சமயம், மொழி வட்டார மற்றும் வகுப்பு வேறுபாடுகளைக் கடந்து, இந்திய மக்கள் அனைவரிடையேயும் நல்லிணக்கத்தையும் பொது உடன்பிறப்புணர்வையும் பேணி வளர்த்தல் மற்றும் மகளிரின் மாண்பிற்கு இழுக்காகும் பழக்கங்களை விட்டொழித்தல் வேண்டும். நமது கலப்புருவான பண்பாட்டின் வளமார்ந்த மரபுச் செல்வத்தை மதித்துப் பாதுகாக்க வேண்டும். காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் இவை உள்ளிட்ட இயற்கைச் சூழலை அழியாது

காத்து வளர்த்தல் மற்றும் உயிரினங்கள்பால் இரக்கங்காட்டுதல் வேண்டும். அறிவியலார்ந்த உளப்பாங்கு, மனிதநேயம், ஆய்ந்து தெளிந்து சீர்திருத்தும் ஆர்வம் ஆகியவற்றை வளர்த்தல் வேண்டும். பொதுச் சொத்தினைக் காப்பணைவு செய்தல், வன்முறையினை முற்றாக ஒழித்தல் வேண்டும். சலியாத முயற்சியிலும் சாதனையிலும் உயர்மிகு நிலைகளை நாடு இடையறாது மேன்மேலும் எய்தும் வகையில், தனிமனித மற்றும் கூட்டுச் செயலாண்மைத் துறைகள் அனைத்திலும் உயர்திறம் நோக்கி ஓயாது முயலுதல் வேண்டும். பெற்றோராக அல்லது காப்பாளராக இருக்கிற நிலையில், ஆறு முதல் பதினான்கு வயது வரையுள்ள தனது குழந்தைக்கு அல்லது நேர்விற்கேற்ப காப்பிலுள்ளவருக்குக் கல்விக்கான வாய்ப்புகளுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**